**யாழ்ப்பாண பல்கலைக்கழகம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் ("பல்கலைக்கழகம்") 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து பல்கலைக்கழகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பல்கலைக்கழகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- பல்கலைக்கழகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- பல்கலைக்கழகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை (ஜேஐசிஏ) திட்டம் மற்றும் உயர்கல்வி விரிவாக்க மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி (ஏஎச்ஈஏடி) திட்டம் 2020 ஆம் ஆண்டில் ரூபா 385,063,178 மற்றும் 2018 ஆம் ஆண்டில் ரூபா 415,423,614 பெறுமதி மிக்க நடைமுறையல்லாத சொத்துக்களை நன்கொடையாக வழங்கியிருந்ததுடன் அந்த தொகைகள் தொடர்புடைய ஆண்டுகளில் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்) 11 இன் பிரகாரம் சொத்துக்களின் நியாயப் பெறுமதி தொடர்புடைய வருடங்களின் நிதிக்கூற்றுக்களில் சொத்துக்கள் மற்றும் வருமானமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லா சொத்துக்கள் ரூபா 385,063,178 இனால் குறைத்து காட்டப்பட்டிருந்தது, திரட்டிய பற்றாக்குறை ரூபா 120,026,945 இனால் கூட்டிக் காட்டப்பட்டிருந்ததுடன் மீளாய்வு ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 680,459,847 இனால் கூட்டிக் காட்டப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டில் ஜேஐசிஏ திட்டத்தின் தளபாடம் மற்றும் உபகரணங்கள் விவசாய பீடத்திற்கு வழங்கப்பட்டிருந்தாலும், இந்த சொத்துக்கள் நன்கொடையாக கருதப்பட்டுள்ளதுடன் இந்த சொத்துக்களை 2021 ஆம் ஆண்டில் இருப்பில் சேர்க்க பேரவையின் அனுமதியை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>ஏஎச்ஈஏடி நடவடிக்கைகள் பல்கலைக்கழகத்துடன் தொடர்புபடாத வேறுபட்ட செயற்பாடுகளாகும். ஏஎச்ஈஏடி திட்டத்தின் கீழ் பெறப்பட்ட நிலையான சொத்துக்கள் நன்கொடையாக எடுக்கப்பட்டுள்ளதுடன் பொருத்தமான பதிவுகள் அதன்படி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அனைத்து பல்கலைக்கழகங்களிலும் மேற்கூறிய அதே நடைமுறையையே ஏஎச்ஈஏடி நன்கொடைக்கு பின்பற்றுகின்றன. | சொத்துக்கள் மற்றும் வருமானங்கள் தொடர்புடைய வருடங்களில் அங்கீகரிக்கப்பட வேண்டும். |
| (ii) | ரூபா 31,189,895 தொகையான மூலதன நன்கொடைகள் எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 11 இன் பிரகாரம் வருமானமாக அங்கீகரிக்கப்படாமல் நடைமுறையல்லா பொறுப்புக்களின் கீழ் தடுத்து வைக்கப்பட்ட நிதிய கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக ஆண்டுக்கான பற்றாக்குறை மற்றும் நடைமுறையல்லா பொறுப்புக்கள் என்பவை நிதிக்கூற்றுக்களில் அதே | எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 10 இன் பிரகாரம் நன்கொடையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பரிமாற்றம் அல்லாத கொடுக்கல் வாங்கல்கள் வருமானமாக அங்கீகரிக்கப்பட வேண்டும். நாங்கள் நிலையான சொத்துக்களை நன்கொடையாக பெறும் போது காசு உட்பாய்ச்சல் எதுவும் இந்த நன்கொடைக்கு ஏற்படவில்லை. எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 10 இன் படி | அனைத்து விடயங்களும் உரிய வகையில் வகைப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகையினால் கூட்டிக் காட்டப்பட்டிருந்தது. | நன்கொடைகள் வருமானமாக வகைப்படுத்தப்பட வேண்டும். அதன் பிரகாரம் எதிர்காலத்தில் வேறுபட்ட நன்கொடையாளர்களின் கீழ் பெறப்பட்ட நிலையான சொத்துக்களை வருமானமாக பதிவுகளுக்கு எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (iii) | காணி மற்றும் கட்டடங்கள் மற்றும் இரண்டு வாகனங்கள் 2015 ஆம் ஆண்டில் 3 அமைச்சுக்களிடமிருந்து பெறப்பட்டு பல்கலைக்கழகத்தால் பயன்படுத்தப்பட்டிருந்தாலும், இந்த சொத்துக்களை கணக்கிற்கு எடுக்கவும் உரிமையை பெறுவதற்கும் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கூடிய விரைவில் சொத்துக்களை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு மாற்றுவதற்கான பின் தொடர்தல் நடவடிக்கை செயற்பாட்டில் உள்ளது. | ஆதனத்தின் உரிமையை பெற தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | கால்நடைகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. மீளாய்வு ஆண்டின் இறுதியில் உள்ளவாறான அந்த கால்நடைகளின் மதிப்பாய்வு செய்யப்பட்ட பெறுமதி அண்ணளவாக ரூபா 3,089,400 ஆக இருந்தது. | பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான பண்ணை, பயிர் பண்ணை கால்நடைகள் மற்றும் கோழிப் பண்ணைகளின் தொகைகளை எதிர்காலத்தில் பல்கலைக்கழக கணக்கு புத்தகங்களில் கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அனைத்து சொத்துக்களும் அங்கீகரிக்கப்பட்டு தொடர்புடைய வருடங்களில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுய நிதியிடல் கற்கை நெறிகளின் செலுத்த வேண்டியவைகளாக நடைமுறை பொறுப்பின் கீழ் காட்டப்பட்ட கூட்டு மொத்த தொகை ரூபா 6,249,270 3 தொடக்கம் 19 வருடங்கள் வரையான காலப்பகுதிக்கு தீர்க்கப்படாமல் இருந்தது. | நாம் இந்த நிதிகளை பயன்படுத்தும் போது கொடுக்கப்பட்ட கட்டளை விதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் நிதியம் பொருத்தமாக பயன்படுத்தப்பட்டுள்ளதை உறுதி செய்கின்றோம். அத்தோடு, இந்த கற்கை நெறிகளின் பயன்படுத்தப்படாத நிதிகள் நன்கொடையாளரினால் எந்நேரத்திலும் கோரப்பட முடியும். எனவே கேட்கப்படும் போது செலுத்தப்பட வேண்டியதாக இருப்பதால் நடைமுறை பொறுப்பின் கீழ் இந்த நிதிகளை பேண வேண்டியுள்ளது. | தீர்க்கப்படாத நிலுவைகளை பயன்படுத்த தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i)பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் தாபனக்கோவை | | | |
| (i) அத்தியாயம் xxii இன் பிரிவு 2 மற்றும் 2.9 | ஒரு உதவி விரிவுரையாளர் 01 ஒக்டோபர் 2013 அன்று இடைநீக்கம் செய்யப்பட்டதுடன் அதே திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்படியாக மீண்டும் பணிக்கமர்த்தப்பட்டதோடு பல்கலைக்கழகத்தினால் அன்றிலிருந்து இன்றுவரை கட்டாய விடுமுறையில் அனுப்பிவைக்கப்பட்டிருந்தார். இருப்பினும், அவர் பேராசிரியர் வரை பதவியுயர்த்தப்பட்டதோடு 01 ஒக்டோபர் 2013 தொடக்கம் 28 பெப்ரவரி வரையான காலப்பகுதிக்காக கூட்டுமொத்தம் ரூபா 26,315,186 பல்கலைக்கழகத்திற்கு எந்தவொரு சேவையும் பெறப்படாமல் செலுத்தப்பட்டிருந்தது. | 29.04.2021 அன்று அல்லது அதற்கு முன்னர் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்க உதவும் வகையில் பல்கலைக்கழகம் சட்டமா அதிபர் திணைக்களகத்திற்கு அறிக்கை அனுப்ப வேண்டும். | பல்கலைக்கழக முகாமை தாபனக் கோவையின் தேவைப்பாடுகளுடன் இணங்க வேண்டும். |
| (ii) அத்தியாயம xx இன் பிரிவு 3 | ஒவ்வொரு உயர்கல்வி நிறுவனத்திலும் ஒரு வருகை பதிவேடு வைக்கப்பட்டு அதில் சம்மந்தப்பட்ட நிறுவனத்தில் பணிபுரியும் ஒவ்வொரு நபரின் வருகை மற்றும் புறப்படும் நேரங்கள் குறிக்கப்பட வேண்டும். இருப்பினும், மீளாய்வு ஆண்டின்போது பல்கலைக்கழகத்தினால் ரூபா 2,148,447,845 தொகையான சம்பளங்கள் கையேடு அல்லது கைவிரல் அடையாள பதிவு | இருப்பினும் துறைத்தலைவர்கள் அவர்களின் வருகையை உறுதிப்படுத்துகின்றார்கள். அவர்கள் எப்போதும் அந்தந்த துறைத் தலைவர்களினால் கண்காணிக்கப்படுகின்றார்கள். | பல்கலைக்கழக முகாமை தாபனக் கோவையின் தேவைப்பாடுகளுடன் இணங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஸ்கானர் மூலம் வருகை மற்றும் புறப்பாடு உறுதி செய்யப்படாது கல்விசார் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ)பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சுற்றறிக்கைகள் | | | |
| (i) 1995 யூலை 14 ஆம் திகதிய 636 ஆம் இலக்க சுற்றறிக்கை | பரீட்சை பெறுபேறுகள் 3 மாதங்களுக்குள் வெளியிடப்பட வேண்டியிருப்பினும், 7 பீடங்களின் பெறுபேறுகள் ஒரு மாதம் தொடக்கம் 21 மாதங்கள் வரையான காலதாமதத்துடன் வெளியிடப்பட்டிருந்தன. | முன்னைய ஆண்டோடு ஒப்பிடுகையில் முடிவுகளை வெளியிடுவதில் குறிப்பித்தக்க முன்னேற்றம் இருந்தது. இந்த செயல்முறையை உன்னிப்பாக கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பெறுபேறுகளை வெளியிடுவதற்கான காலக்கெடு பரீட்சை துணைச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அது பேரவையினால் அனுமதிக்கப்பட உள்ளது. | பல்கலைக்கழக முகாமை சுற்றறிக்கைகளின் தேவைப்பாடுகளுடன் இணங்க வேண்டும். |
| (ii) 2010 பெப்ரவரி 05 ஆம் திகதிய 920 ஆம் இலக்க சுற்றறிக்கை | பல்கலைக்கழகத்திற்கு கூட்டுமொத்தம் ரூபா 17,027,348 7 கல்விசார் உத்தியோகத்தர்களின் குறிப்பிட்ட கல்வி விடுமுறை காலத்தில் பட்டப் பின் படிப்பை தொடர்வதற்காக 2014 தொடக்கம் 2019 வரையான காலப்பகுதியில் ஏற்பட்டிருந்தது. இருப்பினும் அவர்கள் அவர்களின் பட்டப் படிப்பை முழுமைப்படுத்தாது கடமைகளை மீண்டும் தொடங்கியிருந்தனர், பல்கலைக்கழகம் செலவினங்களை வசூலிக்க தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லை. | கற்கை பூர்த்தியாகி அறிக்கை பெறப்பட்டதும் கூடிய விரைவில் இந்த பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். | பல்கலைக்கழக முகாமை சுற்றறிக்கைகளின் தேவைப்பாடுகளுடன் இணங்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் பல்கலைக்கழகத்தின் செயற்பாட்டு விளைவு ரூபா 966,484,640 தொகையான பற்றாக்குறை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,236,122,034 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 269,637,394 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் மீண்டெழும் மானியங்கள் ரூபா 203,512,000 இனால் அதிகரித்தமை முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 மீளாய்வு ஆண்டின் போதான பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் பின்வருமாறு.

#### 3.1.1 நூலக நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் செலுத்தப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா. 1,177,344 பெறுமதியான புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் பல்கலைக்கழகத்தினால் இந்த அறிக்கைத் திகதி வரை கூடப் பெறப்படவில்லை. இதன் விளைவாக பல்கலைக்கழக மாணவர்களுக்கு மேம்படுத்தப்பட்ட அறிவு மற்றும் திறன்களை பெறுவதற்கான வாய்ப்புக்கள் இழக்கப்பட்டன. | நாங்கள் ஒவ்வொரு ஆண்டும் அடுத்த ஆண்டுக்கான புத்தகங்கள் மற்றும் பருவகால இதழ்கள் வழங்கலுக்கான முற்பணத்தை செலுத்துவோம். இந்த முற்பணங்களை தாமதமின்றி தீர்ப்பனவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகளைப் தாமதமின்றி பெற தகுந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

#### 3.1.2 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட ஆராய்ச்சி மானியங்களில் கூட்டு மொத்தம் ரூபா 6,085,466 இனை பயன்படுத்திய பின்பும் கூட 15 ஆராய்ச்சியாளர்களினால் அவர்களின் இறுதி அறிக்கைகள் மீளாய்வு ஆண்டின் இறுதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இதுவரை 19 ஆராய்ச்சியாளர்கள் அவர்களின் இறுதி அறிக்கைகளை இதுவரை சமர்ப்பித்துள்ளார்கள், மற்றும் 16 ஆராய்ச்சியாளர்கள் பல்வேறுபட்ட காரணங்களினால், பிரதானமாக நிலவும் கொவிட்-19 தொற்றுநோய் நிலைமையினால் நீடிப்பிற்காக கோரியிருக்கின்றார்கள். | குறிக்கப்பட்ட ஆராய்ச்சி காலத்தில் ஆராய்ச்சியாளர்களிடமிருந்து அவர்களின் இறுதி அறிக்கைகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பல்கலைக்கழகம் 2015 தொடக்கம் 2020 காலப்பகுதியில் இணை சுகாதார விஞ்ஞான பீடத்தின் விளையாட்டு விஞ்ஞான அலகின் ஆறு ஊழியர்களுக்கு கூட்டுமொத்தம் ரூபா 30,000,000 வழங்கியிருந்தது. எனினும் 2015 ஆம் ஆண்டிலிருந்து எந்தவொரு கல்விசார் கற்கை நெறியும் இந்த அலகில் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அதனது 7 ஜனவரி 2021 இல் நடைபெற்ற கூட்டத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் பட்டப் படிப்பு திட்டத்தை ஆரம்பிக்க ஒப்புதல் அளித்துள்ளது. | பல்கலைக்கழகத்தின் வளங்கள் வினைத்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். |

## 3.3 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (i) கூட்டு மொத்தம் ரூபா 5,026,090 உரிய நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படாமல் 10 வருடங்களுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்ட நிதிய கணக்கின் கீழ் காணப்படுகின்றது. | இந்த ரூபா 5,026,090 நிதியானது நன்கொடையாளர் எந்தவொரு விசேட பணிகளையும் குறிப்பிடாமையினால் எந்தவொரு குறிப்பிட்ட நோக்கத்திற்கும் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. குழுவின் அறிவுறுத்தலை நாங்கள் பெற்ற கூடிய விரைவில், அதன் பிரகாரம் நிதியை பயன்படுத்த நடவடிக்கை எடுப்போம். | இந்த நிதிகளை பயன்படுத்த மேலும் தாமதமின்றி தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) வெளிநாட்டு புலைமைப்பரிசில் திட்டத்திற்கு சென்ற தொண்ணூறு (90) கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் கடமைக்கு அறிக்கையிட்டு இருக்கவில்லை. எவ்வாறாயினும் பல்கலைக்கழகமானது 1983 ஆம் ஆண்டிலிருந்து 2020 காலப்பகுதிக்குள் உடன்படிக்கை மீறியமைக்காக கூட்டுமொத்தம் ரூபா 62,343,767 பெறுமதியான பிணைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கிடைத்த தகவலின் அடிப்படையில் ரூபா 2,351,823 பிணைத் தொகையானது அறவிடப்பட வேண்டியுள்ளதுடன் 31.12.2018 இல் உள்ளவாறான பல்கலைக்கழக சேமலாப நிதிய மொத்த நிலுவையானது ரூபா 4,425,613 ஆகும். இந்த ஊழியர்கள் அவர்களின் யூபிஎவ் இனை கோரும் போது நிலுவைகளை அறவிட பின் தொடர்தல் நடவடிக்கை எடுக்கப்படும். | பொறுப்பான உத்தயோகத்தரிடமிருந்து பிணைகளை அறவிட உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (ஶ) பல்கலைக்கழகம் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் மற்றும் வவுனியா வளாகத்தின் 666 கல்விசாரா உத்தியோகத்தர்கள் மற்றும் கல்விசார் உத்தியோகத்தர்களினதும் 27 கல்விசார் உதவி உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை நிரப்பவில்லை. | தற்போதுள்ள வெற்றிடங்களை உடனடியாக நிரப்ப அனைத்து முயற்சிகளையும் பல்கலைக்கழகம் எடுத்துள்ளது. இருப்பினும் பேராசிரியர், துணை பேராசிரியர், சிரேஸ்ட விரிவுரையாளர்/ விரிவுரையாளர் போன்ற சில முக்கிய கல்விசார் பதவிகளுக்கான முயற்சிகள் பலமுறை விளம்பரங்கள் செய்யப்பட்ட போதிலும் பொருத்தமான தகுதிகளுடன் விண்ணப்பம் எதுவும் பெறப்படாமையால் இன்னும் செயற்பாட்டில் உள்ளது. இத்தகைய சூழ்நிலைகளில் பல்கலைக்கழகம் கல்வித் திட்டங்களை இடையூறு இல்லாமல் செயல்படுத்தும் பொருட்டு வெற்றிடமாக உள்ள இந்தப் பதவிகளை தற்காலிக விரிவுரையாளர், தற்காலிக வழிகாட்டுனர் அல்லது தற்காலிக பயிற்றுனர்களால் நிரப்பியது. | வெற்றிடங்கள் தாமதமின்றி நிரப்பப்பட வேண்டும். |
| (ii) கூட்டு மொத்தம் ரூபா 1.225,604 அங்கீகரிக்கப்படாத உத்தியோகத்தர் வகைகளுக்காக சம்பளங்கள் மற்றும் ஏனைய படிகளாக அவர்களின் நியமன திகதியிலிருந்து பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்டுள்ளது. மேலும், பல்கலைக்கழகம் மிகை ஆளணிக்கு அனுமதி பெற தகுந்த நடவடிக்கைகள் எடுக்கவில்லை. | அனுமதிக்கப்பட்ட ஆளணி மீறப்படாமல் இருப்பதை உறுதி செய்ய எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | மிகை ஆளணிக்கு அனுமதி பெற தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 தீர்க்கப்படாத கணக்காய்வு விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வாகன கொடுப்பனவு ரூபா. 1,740,000 மற்றும் எரிபொருள் கொடுப்பனவு ரூபா. 710,360 ஆகியவை பல்கலைக்கழகத்தின் பதில் நிதியாளருக்கு அவரது பதில் கடமைக்காக 2015 தொடக்கம் 2018 வரையான காலப்பகுதியில் 18 செப்ரெம்பர் 2015 ஆம் திகதிய இல 13/2015 மற்றும் 09 ஜனவரி 2016 ஆம் திகதிய இல 13/2015(i) ஆகிய தாபன சுற்றிக்கைகளுக்கு முரணாக செலுத்தப்பட்டது. | பதில் நிதியாளர் 21.12.2013 இருந்து 31.12.2018 வரையிலான காலப்பகுதியில் பணியாற்றியுள்ளார். தாபன சுற்றறிக்கை இல 13/2015 இற்கமைய மேலே உள்ள கொடுப்பனவிற்கு பதில் நிதியாளர் தகுதியுடையவர். 20.02.2009 ஆம் திகதியிடப்பட்ட நடைமுறை விதிகள் தொகுதி 1 இன் மேலதிக வர்த்தகமானி அறிவிப்பு இல 1589/30 இற்கமைய அத்தியாயம் 9 இன் பந்தி 119 இல் உள்ள விதிகளுக்கமைய பதில் நிதியாளருக்கு போக்குவரத்து மற்றும் எரிபொருள் கொடுப்பனவு செலுத்தப்பட்டது. | முறையற்ற கொடுப்பனவுகள் பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டும். |